குளித்தலை தொகுதியில் -என்.எச்.67 தேசிய நெடுஞ்சாலைக்கு மாற்றாக

இராணி மங்கம்மாள் சாலையை நான்கு வழிச் சாலையாக திருச்சி வரை அமைத்திடுவீர்!

சட்டப்பேரவையில் குளித்தலை தொகுதி உறுப்பினர் இரா. மாணிக்கம் கோரிக்கை!

சென்னை, ஜூன் 29- குளித்தலை தொகுதியில் என்.எச். 67 தேசிய நெடுஞ்சாலைக்கு மாற்றாக, இராணி மங்கம்மாள் சாலையை நான்கு வழிச் சாலையாக திருச்சி வரை அமைத்திடுவீர் என சட்டப் பேரவையில் குளித்தலை தொகுதி உறுப்பினர் இரா. மாணிக்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

பேரவையில் அவர் பேசியதாவது:-

1957 ஆம் ஆண்டு முதன் முதலாக குளித்தலை தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகவென்று, அதனைத் தொடர்ந்து நின்ற தொகுதிகளிளெல்லாம் வென்ற தலைவர். எங்களது குளித்தலை சட்டமன்ற தொகுதி மக்களின் இதயங்களில் நின்று, இன்றும் எங்களை வாழ வைத்து வழிநடத்திக் கொண்டிருக்கின்ற உலகம் போற்றும் உன்னதத் தலைவர், சமத்துவ நாயகர் எங்கள் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞரின் மறு உருவமாய், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு நம்மை வழி நடத்திக் கொண்டிருக்கின்ற கழகத் தலைவர்; நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 100 சதவீதம் வெற்றி கண்ட மாவீரர்; தலைமையேற்று நடத்திய தேர்தல் அனைத்திலும் வாகைச்சூடிய சரித்திர நாயகர்; கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பணிவான வணக்கம்.

தொகுதி மக்கள் சார்பில் நன்றி!

குளித்தலை தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், குளித்தலை, தோகைமலை, கிருஷ்ணராயபுரம் ஒன்றியங்களை உள்ளடக்கிய 46 ஊராட்சிகளில் உள்ள 604 குடியிருப்பு பகுதிகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்தை அறிவித்து, தொகுதி மக்களை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்திய நகர்ப்புற வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அண்ணன் கே.என். நேரு அவர்களுக்கு குளித்தலை தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியா கூட்டணி சார்பில் பெரம்பலூர் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அருமை தம்பி அருண் நேரு அவர்களுக்கும், குளித்தலை தொகுதியில் மட்டும் சுமார் 74,000 வாக்குகள் அதிகமாக அளித்து சரித்திர சாதனை வெற்றியை அளித்த தொகுதி மக்களுக்கும், வெற்றிக்கு உழைத்திட்ட கழகத் தோழர்களுக்கும், கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முதல் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இரண்டாவது முறையாக பணியாற்றிட, சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்த எளியவனான எனக்கு வாய்ப்பு வழங்கிய தளபதி அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மாமன்றத்திற்கு என்னை அனுப்பி வைத்திருக்கின்ற குளித்தலை தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எண்ணற்ற மகத்தான திட்டங்கள்!

மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிறேன். மாற்றுத் தலைவர் அவர்களே, மாநில சட்டமன்றம். தமிழ்நாடு சட்டமன்றத்திற்கென்று பல்வேறு பெருமைகள் உண்டு. பேரறிஞர் அண்ணா அவர்காளல் தமிழ்நாட்டிற்கு தமிழ் நாடு என்று பெயர் சூட்டும் தீர்மானம் 1967 ஜூலை 18ல் நிறை வேற்றிய பெருமை பெற்ற அவையாகும்.

தந்தை பெரியாரின் கனவான சீர்திருத்த திருமணச் சட்டம், 1989ல் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, பெண்களுக்கு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு மற்றும் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நிறைவேற்றப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சியில் தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களால் மகளிருக்கு இலவசப் பேருந்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மாதம் ரூ.1,000/ம் வழங்கும் திட்டம், உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு ரூ.1,000/ம் வழங்கும் புதுமைப் பெண் திட்டம், அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும்திட்டம், முதல்வரின் கனவுத் திட்டமான 'நான் முதல்வன் திட்டம்', மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம்நம்மை காக்கும் 48, கலைஞரின் வீடு வழங்கும் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் போன்ற எண்ணற்ற மகத்தான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது இந்தப் பெருமைமிகு அவையில்தான் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் தளபதி அவர்கள் தலைமையில் செயல்படும் திராவிட மாடல் ஆட்சியில், நம்முடைய அமைச்சரவை மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் சிறப்பாக பணியாற்றி வருகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எரிசக்தித் துறை!

முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆட்சியில் எரிசக்தித் துறை மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. அணுமின் சக்தி, சூரிய மின்சக்தி, காற்று மின்சக்தி, வெப்ப மின்சக்தி என்று பல வகை இருந்தாலும், அவற்றில் பசுமை சக்திகளாக SOLAR ENERGY எனப்படும் சூரிய மின் சக்தியையும், காற்றாலை மின் சக்தியையும் குறிப்பிடுவோம். முதலமைச்சர் தளபதி தலைமையிலான ஆட்சி வந்த பிறகுதான் அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்படி, மின் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பான செயல்பாட்டினால் தனியார் மற்றும் அரசு நிறுவனங்களில் சோலார் தகடுகள் திக்கப்பட்டுள்ளன. வர்த்தக பயன்பாடு, குடியிருப்பு பயன்பாடு என சுமார் மொத்தம் 10,000 மெகா வாட் மின்சக்தி இதன்மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

சோலார் உற்பத்தி செய்ய தனியார் முன் வந்தாலும் அவர்களுக்கு முன்னுரிமைக் கொடுத்து, தேவையான அனுமதியை வழங்கி, மின் உற்பத்தியைப் பெருக்கி, தமிழகத்தின் மின் தேவையை முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி, மின் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாக நிறைவு செய்து வருகிறார்கள். நமது முதலமைச்சர் அவர்களின் இத்தகைய சிறப்பான செயல்பாடுகளினால் இக்கோடைக் காலத்தைக்கூட மிகச் சிறப்பாக மின் தட்டுப்பாடின்றி சமாளிக்க முடிந்தது என்பதைப் பெருமையுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இலவசமாக 2 இலட்சம் மின் இணைப்புகள்!

முதலமைச்சர் தளபதி அவர்களின் திருக்கரங்களால் தமிழகம் முழுவதும் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு சுமார் 2 இலட்சம் இலவச விவசாய மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம் மட்டுமல்ல, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகிற திட்டமாகும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், சென்னை பெருநகரத்தில் உள்ள தாழ்வான மின்மாற்றிகள் அனைத்தும் உயர்த்தி அமைக்கப்பட்டதால் பெரும் மழை வெள்ளப்பெருக்கிலும் மின்தடை ஏற்படவில்லை எனவும், உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டது எனவும் சென்னைவாழ் மக்கள் நன்றியோடு பாராட்டுகின்றார்கள்.

குளித்தலை தொகுதி, அய்யர்மலை, பனிக்கம்பட்டி, தோகமலை போன்ற பகுதிகளில் தனியார்மூலம் ஏறத்தாழ 500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் அளவுக்கு சோலார் தகடுகள் பதிக்கப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரிய துணை மின் நிலையங்கள் வழியாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

திருச்சி மாவட்டம், பிராட்டியூரில் 230/110 கே.வி. துணை மின் நிலையமும், கரூர் மாவட்டம், புகழூரில் 230/110 கே.வி. துணை மின் நிலையமும் உள்ளது. இவை இரண்டுக்கும் இடைப்பட்ட தொலைவு ஏறத்தாழ 120 கிலோ மீட்டர் ஆகும். இவ்விரண்டிற்கும் இடைப்பட்டமையப் பகுதியான அவ்வாறு அமைக்கும்பட்சத்தில், அருகிலுள்ள மொண்டிபட்டி TNPL ஆலைக்குத் தேவையான தடையற்ற மின்சாரம் வழங்குவதற்கும், தொழில் நகரமான கரூருக்கு சீரான மின் விநியோகம் செய்வதற்கும் பேருதவியாக இருக்கும். மேலும், குளித்தலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொழில்வளம் பெருக ஏதுவாக அமையும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட மாடல் ஆட்சியில் குளித்தலை தொகுதியில் சுமார் 8 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சுமார் 300

புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டும், சுமார் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 மின்மாற்றிகள் தரமுயர்த்தப்பட்டும் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சூளை மின் நிலையம் பணிகள்!

கரூர் மின் பகிர்மான வட்டம், குளித்தலை தொகுதி, அய்யர்மலை உபகோட்டத்திற்குட்பட்ட சின்னப்பனையூர் பிரிவு அலுவலக எல்லையில் புதிய 110 கே.வி./11 கே.வி. துணை மின் நிலையம் கடந்த 7.11.2022 அன்று முதலமைச்சர் அவர்களால் காணொளிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டப்பட்டது. இத்துணை மின் நிலையம் அமைக்கும் பணி தாமதமாகவும், மிகவும் மந்தமான நிலையில் நடைபெற்று வருகிறது. சின்னப்பனையூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் நிலவும் குறைந்த மின்னழுத்தத்தின் காரணமாக பொதுமக்களும், விவசாயிகளும் மிகவும் சிரமப்பட்டுவரும் நிலையில், அமைச்சர் அவர்கள் இந்த துணை மின் நிலையப் பணிகளை விரைவாக முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நிதித் துறை!

பல்வேறு நெருக்கடியான சூழ்நிலையில், ஏற்கெனவே இருந்த அரசால் தமிழக அரசின் நிதிநிலைமை மிக மோசமான நிலையில் இருந்தது. மேலும், கொரோனா பெருந்தொற்று காலத்தில் இக்கட்டான சூழ்நிலையில் பதவி ஏற்றுக் கொண்ட நமது அரசு, முதலமைச் சர் அவர்களின் நிர்வாகத் திறமையால் தமிழகத்தின் நிதிநிலைமையில் தொடர்ந்து முன்னேறி வருகிறது. இந்தச் சூழ்நிலையில், இந்தியாவின் இரண்டாவது பெரிய மாநில பொருளாதாரமாக தமிழ்நாடு உள்ளது. நாட்டின் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் தமிழகம் 8.8 சதவிகிதம் பங்களிக்கிறது. நிதியாண்டு 2023ல் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி 294 பில்லியன் டாலர்களாக விரிவடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவை இரணடும் நம்முடைய முதமைச்சர் தளபதி அவர்களுடைய அரசின் மிகப் பெரிய சாதனைகள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதித் துறையின்கீழ் பல்வேறு தணிக்கைத் துறைகள் மற்றும் கருவூலத் துறை ஆகியவை இயங்கி வருகின்றன. இவற்றில், நிதித் துறையின்கீழ் இயங்கும் அனைத்து தணிக்கைத் துறையின் பணியாளர்களுக்கு தற்போது கலந்தாய்வு முறையில் (கவுன்சிலிங் முறையில்) வெளிப்படைத்தன்மையாக பொதுப் பணியிட மாறுதல் நடைபெற்று வருவதை அத்துறை பணியாளர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள்.

இந்த முறையிலேயே நிதித் துறையின்கீழ் இயங்கும் அனைத்துத் துறைப் பணியாளர்களுக்கும், ஒவ்வொரு ஆண்டும் பொதுப் பணியிட மாறுதலை கலந்தாய்வு முறையில் செயல்படுத்திட துறை வாரியான அரசாணைகள் வெளியிட்டு செயல்படுத்திட வேண்டுமாய் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நிதித் துறையின்கீழ் வரும் தணிக்கைத் துறையைப் பொறுத்தவரை, ஏறத்தாழ 15 முதல் 20 ஆண்டுகள் அப்பணியில் ஈடுபட்டவர்களே உதவி இயக்குனர்களாக நியமிக்கும் பட்சத்தில் அவர்களுக்குத் துறை தொடர்பான தெளிவு முழுமையாக பெற்றிருப்பதால், தணிக்கைத் தடைகள் தரம் வாய்ந்ததாக அமையும். எனவே, உதவி இயக்குனர் பணியிடத்தைப் பணிமூப்பின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்களுக்கு வைக்கப்பட்டுள்ள கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மனிதவள மேம்பாடு!

ஒரு நாட்டின் மிக முக்கிய வளங்களில் இன்றியமையாத முதலிடம் வகிப்பது மனிதவளமே. மனித வள மேம்பாடு என்பது ஒரு அரசு அல்லது ஒரு நிறுவனம் தங்கள் ஊழியர்களுக்கான திறமையை மேம்படுத்தும் வகையில் வழங்கும் பயிற்சியைக் குறிக்கிறது. இதனால் அவர்கள் திறம்பட பணியாற்றத் தேவையான திறன்களைப் பெறமுடியும். (மணியடிக்கப்பெற்றது) முதல்வர் தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சியை பொறுத்தவரை எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கவேண்டுமென்ற உயரிய நோக்கில் அரசுப் பணிகளுக்குத் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்மூலமாக அரசுப் பணியில் உள்ள காலியிடங்களை நிரப்ப பல்வேறு நகரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் படித்த பட்டதாரி இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களுக்குத் துறை தொடர்பான பயிற்சிகள் அந்தத் துறை யின்மூலம் வழங்கப்படுகிறது.

அதற்கான பயிற்சி நிலையம் BHAVANISAGAR பகுதியில் மட்டுமே உள்ளது. இப்பயிற்சி நிலையத்தினை அனைத்து மண்டல அளவிலும் ஏற்படுத்தினால், அரசுப் பணியாளர்கள் சிரமமின்றி பயிற்சி மேற்கொள்ள உதவியாக அமையும். ஆகவே, பயிற்சி நிலையங்களை அனைத்து மண்டல அளவில் அமைத்துக்கொடுக்க வேண்டுமாய் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வூதியங்களும் - ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். இந்திய ஓய்வூதிய முறையின் வரலாறு ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலிருந்து தொடங்குகிறது. ஓய்வூதியம் என்பது அரசுத் துறையில் ஓர் அரசு ஊழியர் வயது முதிர்வு காலம் வரை பணியாற்றி வயது மூப்பின் காரணமாக, ஓய்வு பெறும்போது அவரது பொருளாதார நலனை ஈடுகட்டும் வகையில் அரசு மாதம் ஒரு தொகையை அரசு ஊழியருக்கு வழங்கி வருகிறது.

இப்பணியில் இருக்கும் அரசு பணியாளர்கள் இயற்கை எய்தும் பட்சத்தில் அவரது வாரிசுகளுக்கு குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்கும் நடைமுறையை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் கொண்டு வந்தார்கள். மாதம் ரூ.10 சந்தாவாகப் பெறப்பட்டு குடும்பப் பாதுகாப்பு நிதி ரூபாய் 10,000 வழங்கப்படும் திட்டமாக இது தொடங்கப்பட்டது. தற்போது இத்தொகை ரூ.3 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இயற்கை எய்தும் ஓய்வூதியரின் குடும்பத்திற்கு ரூ.25,000 வழங்கும் திட்டம் அறிமுகமானது. தற்போது இத்தொகை ரூ.50,000 மாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இந்தத் திட்டங்கள் அனைத்துமே தி.மு.க. ஆட்சியில் கொண்டுவந்த திட்டங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய குளித்தலை தொகுதியினுடைய பஞ்சப்பட்டி மாயனூர் ஏரி என்பது சுமார் 1000 ஏக்கர் பரப்புள்ள ஏரியாகும். அந்த ஏரிக்கு மாயனூர் பகுதியிலிருந்து காவிரி வெள்ள உபரி நீரை மின்மோட்டார் மூலம் ஏரியை நிரப்ப வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாளாக இருந்துகொண்டிருக்கிறது. அதை நிறைவேற்றித்தரவேண்டுமாய் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய தொகுதிக் கோரிக்கைகளை நான் படித்ததாகக் கருதி அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, துறை அமைச்சர் அவர்களுக்கு நீங்கள் அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பரிந்துரை செய்யுமாறு கேட்டு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

தொகுதி கோரிக்கைகள்:

1. காவேரி ஆற்றின் குறுக்கே மருதூர்உமையாள்புரம் புதிய கதவணைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

2. மணப்பாறைகுளித்தலை சாலை, இரயில்வே பாதையில் மேம்பாலம் கட்டித்தரவேண்டும்.

3. குளித்தலை தொகுதி, அய்யர்மலை பகுதியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும்.

4. தோகைமலை பகுதி, ஒருங்கிணைந்த புதிய சார்பதிவாளர் அலுவலகம் கட்டித்தர வேண்டும்.

5. குளித்தலை தொகுதி, விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டும்.

6. NH 67 தேசிய நெடுஞ்சாலைக்கு மாற்றாக ராணி மங்கம்மாள் சாலையை நான்கு வழிச் சாலையாக மாயனூர் மணவாசி முடக்கு சாலையிலிருந்து எழுதியாம்பட்டி மேட்டுமகாதானபுரம் நால்ரோடு மகளிப்பட்டி- பிள்ளாபாளையம்- வீரவல்லிசீகம்பட்டி எழுநூற்றுமங்களம் - குட்டப்பட்டி - குமாரமங்கலம்—பொய்யாமணி - நங்கவரம் - கவண்டம்பட்டி - சூரியனூர் முதலைப்பட்டி - எட்டரை ஒத்தக்கடை -அதவத்தூர் வழியாக திருச்சி வரை அமைத்திட வேண்டும்.

7. மணப்பாறை - குளித்தலை இருவழி சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றித்தர வேண்டும்.

8. குளித்தலை தொகுதி, சீகம்பட்டி, மேல குட்டப்பட்டி, வைகைநல்லூர் கிராமம், தெற்கு மயிலாடி, கல்லுப்பட்டி, இரத்தினம்பிள்ளைபுதூர், கணக்கப்பிள்ளையூர், மேலப்பட்டி, வலையபட்டி, பணிக்கம்பட்டி, நச்சலூர், தோகைமலை ஒன்றியம் கட்டாணி மேடு & சேப்பளாப்பட்டி குளித்தலை காட்டுவாரியின் குறுக்கே மேட்டு மருதூர் போன்ற பகுதிகளுக்கு புதிய பாலம் கட்ட வேண்டும்.

9. குளித்தலை நகரத்தில் தென்கரை வாய்க்காலில் குறுக்கே சங்கலிராயன் கோவில் தெரு, நாப்பாளையம், பகவதி அம்மன் கோவில் தெரு, சபாபதி நாடார் தெரு, போன்ற இடங்களில் பாலம் கட்ட வேண்டும்.

10. கரூர் மாவட்டம் குளித்தலை குளித்தலை ஒன்றியம் சூரியனூரையும், திருச்சி மாவட்டம் கொடியாலத்தையும் இணைக்கும் வகையில் உய்யகொண்டான் ஆற்றின் குறுக்கே புதிய இணைப்பு பாலம் கட்ட வேண்டும்.

11. தோகைமலை ஒன்றியம் காவல்காரன்பட்டி, வடசேரி, தென்னகர் வழியாக வெள்ளிவாடி திண்டுக்கல் நெடுஞ்சாலை (GASPLANT) வரை செல்லும் சாலை. மேலும் தோகைமலை ஒன்றியம் R.T மலை முதல் புழுதேரி வழியாக சீத்தப்பட்டி (NH 45 சாலை) உள்ள சாலைகளை அகலப்படுத்தி தரம் உயர்த்த வேண்டும்.

12. வீரவல்லி சறுக்கு பாலத்திலிருந்து கள்ளப்பள்ளி தெற்கு வரை புதிய சாலை அமைக்க வேண்டும்.

13. குளித்தலை நகரத்தில் உள்ள நெடுஞ்சாலைத் துறைக்கு புதிய விருந்தினர் மாளிகை கட்டித்தர வேண்டும்.

14. குளித்தலை தொகுதி, சிப்காட் அல்லது சிட்கோ தொழிற்பேட்டை அமைத்திட வேண்டும்.

15. சிவாயம் வாரியின் குறுக்கே இரண்டு தடுப்பணைகள், நங்கம் காட்டு வாரி அருகே 3 தடுப்பணைகளுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

16. குளித்தலை சார்நிலைய கருவூலம் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் அமைத்து தர வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ந.உ. சிவசாமி

ஜூன் 29 (2023)

இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

மாவட்ட பிரதிநிதியாகவும் – முப்பது ஆண்டுகள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – பத்தாண்டுகள் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து முத்துப்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.

ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர், மாவட்ட வேளாண்மை விற்பனை குழு உறுப்பினர், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர், எடையூர் சங்கந்தி கூட்டுறவு சங்க தலைவர் என பல்வேறு அமைப்புகளில் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.